# தமிழ்நாடு வனத்துறை

அனுப்புநர்
திரு.கோ.பாரத்,
வனச்சரக அலுவலர்,(கூ.பொ)
களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்,
கடையம் வனச்சரகம்,
சிவசைலம்.

பெறுநர்
செயற்பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
ஜம்பு நதி - ராமநதி புராஜெக்ட்,
திருநெல்வேலி-11

**ந.க. எண்.455 /2020 நாள் 07.12.2020**

ஐயா,

0 8 DEC 2020

பொருள் : வனம் - ஜம்பு நதி - ராமநதி புராஜெக்ட் பணிகளில் முறைகேடுகள் ஏற்பட்டது - சம்பந்தமாக.

******

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் கோட்டம் கடையம் வனச்சரக எல்லைக்குட்பட்ட வனப்பகுதியின் வெளிமண்டல பகுதியான ராமநதி பகுதியில் பொதுப்பணித்துறையினரால் புதிதாக வாய்க்கால் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்விடத்தில் கீழ்காணும் பணிகள் வனத்துறையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.புலிகள் காப்பகத்தின் வெளிமண்டல பகுதியில் வாய்க்கால் உருவாக்கும் இடத்தில் 57 மரங்கள் வனத்துறையின் அனுமதியின்றி வெட்டப்பட்டுள்ளது.

2. 0.39 ஹெக்டேர் பரப்பில் புதிதாக சாலை அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட செயல்கள் வனப்(பாதுகாப்பு) சட்டம் 1980 மற்றும் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய நெறிமுறைகளுக்கு முரணானதாகும்.

எனவே மேற்கண்ட ஒழுங்கீனங்களுக்காக வனப்பாதுகாப்பு விதி 2003 பிரிவு 9-ன்படி பொதுப்பணித்துறையினரின் மீது ஏன் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான காரண விளக்கத்தினை இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 60 தினங்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால் தக்க நடவடிக்கை மேற்கொள்ள உயர் அலுவலர்களுக்கு அறிக்கை செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு: அனுமதியின்றி வெட்டப்பட்ட மரங்கள் மற்றும் சாலையின் புகைப்படம்

தங்கள் உண்மையுள்ள,

வனச்சரக அலுவலர்,(கூ.பொ)
கடையம் வனச்சரகம்,
சிவசைலம்.

நகல்: துணை இயக்குநர்/வன உயிரினக்காப்பாளர், புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் அவர்களுக்கு இணைப்புகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned with CamScanner

பொபது/நீஆஅ

அனுப்புனர்

பொறி. ச.ரமேஷ்,பி.இ.,எம்.டெக்
செயற்பொறியாளர்,பொபது,நீஆஅ.,
சிறப்பு திட்டக்கோட்டம்
திருநெல்வேலி-11.

பெறுநர்

வனச்சரக அலுவலர், களக்காடு
முண்டன்துறை புலிகள் காப்பகம்,
கடையம் வனச்சரகம்,
சிவசைலம்.

கடித எண்: 14[m]/வஅ/கோஅ/2021/நாள்: 02.02.2021

அய்யா,

பொருள் - தென்காசி மாவட்டம், தென்காசி மற்றும் ஆலங்குளம் வட்டத்திலுள்ள இராமநதி நீர்த்தேக்கத்தின் உபரி நீரை ஜம்புநதி பாசன பகுதிக்கு உட்பட்ட குளங்களுக்கும், புங்கன்குளம் மற்றும் அதன் கீழுள்ள குளங்களுக்கும் கொண்டு செல்ல புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் - மரம் வெட்டுதல் மற்றும் சாலை அமைத்தல் மறுப்பு தெரிவித்தல் - சம்பந்தமாக.

பார்வை - 1. வனச்சரக அலுவலர், களக்காடு முண்டன்துறை புலிகள் காப்பகம், கடையம் வனச்சரகம், சிவசைலம் ந.க.எண். 455/ 2020/நாள். 07.12.2020.

2. உதவி செயற்பொறியாளர், பொபது/நீஆஅ, சிறப்பு திட்ட உபகோட்டம் எண்-2, கடையம் அவர்களின் கடித எண். உ.கோ.2/2021/உசெபொ.2/கடையம்/நாள். 02.02.2021.

----------------

பார்வை-1ல் காணும் தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து, உதவி செயற்பொறியாளர், சிறப்பு திட்ட உபகோட்டம் , கடையம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க அறிக்கை தங்களின் கனிவான பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

களக்காடு முண்டன்துறை புலிகள் காப்பகம் அம்பாசமுத்திரம் கோட்டம், கடையம் வனச்சரகம் வெளிமண்டலத்தில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை, வருவாய்துறை மற்றும் பட்டா இடங்களில் இராமநதி ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெறவுள்ள நில எடுப்பு புலங்களில் உள்ள மரங்களை வனத்துறை, வருவாய்துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலம் கூட்டுபுலத்தணிக்கை செய்து மரங்களை கணக்கிடும் பணி 15.10.2020 அன்று நடைபெற்றது. மேற்படி மரங்களை வெட்ட அனுமதி பெறுவது தொடர்பாக உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் வாய்க்கால் அமையவுள்ள பகுதியில் உள்ள மரங்கள் மற்றும் வெடி வைத்து வாய்க்கால் தோண்டக்கூடிய பகுதியினை 27.10.2020 அன்று துணை இயக்குனர், புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனசரக அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இணை இயக்குனர், புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் க.எண். C.No.D/3068/2020 நாள். 31.10.2020 மூலம் பணிகளை தொடர சுற்றுச் சூழல் மற்றும் வனம் (NBWL) அனுமதி

\\system2\g\h.d- 2017\2ass tamil.docx

Scanned with CamScanner

பெற்று பணிகளை தொடர கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் பணிகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்டு. சுற்று சூழல் மற்றும் வனம் அனுமதி பெறுவது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மரங்களை வெட்டவோ மற்றும் சாலை அமைப்பது போன்ற பணிகள் ஏதும் 31.10.2020 பின்னர் பொதுப்பணித்துறை மூலம் நடைபெறவில்லை என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2/2/21

செயற்பொறியாளர் பொ.ப.து.நீஆஅ,
சிறப்பு திட்டக் கோட்டம், திருநெல்வேலி -11.

2/2/2021

\\system2\g\h.d- 2017\2ass tamil.docx